[1973 நவம்பர் 21

சேலம்-செம்மன்குடல் பேருந்துப்பணி

*289 வினா—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், செம்மன்குடலுக்கும் சேலத்திற்கும் இடையே முத்தநாயக்கன்பட்டி, பெரமச்சூர், கருப்பூர் வழியாக பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

மாயூரத்திலிருந்து புதிய பேருந்து வழித்தடங்கள்

*290 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பஸ் 4—5—1973 அன்று இருந்து இந்த பாதையில் சென்று வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த 7 ஆண்டுக் காலமாக இந்தக் கோரிக்கையை சட்டமன்றத்திலும், அதிகாரிகளிடத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும்

1973 நவம்பர் 21]

வற்புறுத்தியிருக்கிறேம். அப்படியிருந்தும் இன்னும் பேருந்து விடப்படாமலிருப்பதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? இவ்வளவு கெஞ்சுதல்களுக்குப் பிறகாவது—இனிமேலாவது விரைந்து செயல்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த துணை வினா 290-வது கேள்விக்குரியது என்று கருதுகிறேன். சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு அந்த வழியாக பஸ் விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பஸ் கிடைத்தவுடன், அவர்கள் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, உண்மையில் நமது அரசுடைமையாக்கும் திட்டத்தின்கீழ் மாயூரம் சக்தி விலாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 50-க்கு மேற்பட்ட பஸ்களை அரசாங்கம் ஏற்றுள்ளது என்று பத்திரிகையில் பார்த்து தெரிந்து கொண்டேன். மிக்க மகிழ்ச்சி. அந்த பஸ்களிலிருந்து—ஓடுகின்ற பஸ்ஸாக பார்த்து, ஒன்றினை இந்த வழித்தடத்தில் விடுவதற்கு அமைச்சரிடம் கோரிக்கை வந்தால் அதற்கு அனுதாபத்துடன் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அனுதாபங்கள் நிறைய உண்டு.

ஆலய ஊழியர்கள் ஊதியம்

*292 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஊழியர்களுக்கு மாத முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்கப்படுவது குறித்து அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, பொதுவாகவே, 10, 15 தேதிக்குப் பிறகுதான் ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதனால் ஊழியர்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். ஆகவே, முதல் வாரத்திலேயே சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?